Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 463/2025 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கனகராஜன் SSI |
| Father's Name | – | பழனிச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th November 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

ஆய்வாளர் கொடுத்த தகவலின் அடிப்படையில் நாங்கள் மூவரும் சம்பவ இடத்திற்கு வந்தோம். மேற்படி சம்பவ இடத்தின் வீதி கிழமேல் வீதி ஆகும். கிழமேல் வீதியில் தென்புறமாக தெற்கு பார்த்து உள்ள வீடு ஆகும். வீட்டின் கதவு எண் விலாசம் எனக்கு தெரியாது.வீட்டின் உரிமையாளர் மலர் பாலு ஆவார். எத்தனை பாகம் கொண்ட வீடு என தெரியாது. அது சிமெண்ட் கட்டிடம் ஆகும். அதில் எத்தனை அறைகள்கொண்ட வீடு என்றால் முன்பக்க வீட்டில் உரிமையாளர் குடியிருககின்றார். பின்பக்க அறையில் தான் சம்பவம் நடந்தது.

ரூமிற்குள் சென்று சோதனை செய்த பிறகு மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டன. முன்பக்க அறையில்தான் மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டது. எத்தனை அறை என்று தெரியாது. சோதனை கட்டளை எதும் வாங்கவில்லை. முன்கூட்டியே நீதிமன்றத்திடம் இருந்து அனுமதி ஏதும் வாங்கவில்லை. சோதனை ஜாபிதா தயார் செய்யவில்லை. 4, 5 அட்டைப்பெட்டியில் மதுபாட்டில்கள் இருந்தன. வெளிநாட்டு மதுபானங்கள் தான் அது எந்த நாட்டு மதுபானம் என்று தெரியாது. சம்பவ இடத்தில் சுமார் 01.30 மணி நேரம் இருந்தோம். அந்த இடம் குடியிருப்பு பகுதி நிறைந்த இடம். தனிநபர் சாட்சிகளிடம் விசாரிக்கவில்லை. உரிமையாளர் அச்சமயத்தில் அங்கு இல்லை.

அந்த அறையினை எதிரி தான் வாடகைக்கு எடுத்துள்ளார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அந்த மதுவகைகளை யார் வைத்தார்கள் என நேரடியாக தெரியாது. மது அருந்துவது குற்ற நான் தற்போது பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.04.2025 ஆம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் நவநீதகிருஷ்ணனுடன் நான் முதல் நிலை காவலர் 2170 மற்றும் காவலர் 1947 மதுவிலக்கு குட்கா புகையிலைப்பொருட்கள் சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்தபோது உதவி ஆய்வாளர் நவநீதகிருஷ்ணனுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சுமார் 09.00 மணிக்கு பல்லடம் லரோடு கோட்டாம்பட்டி மகாலிங்கபுரம் தேவரங்கன் வீதியில் வாடகைக்கு ரூம் எடுத்து தங்கியிருந்தார் அங்கு சென்று பார்த்தபோது அரசு அனுமதியின்றி வெளிநாட்டு மதுபானங்கள் சுமார் 70 பாட்டிள்கள் விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார்.

சுமார் 10.00 டு 10.30 மணியளவில் மேற்படி மதுபாட்டில்களை மகஜர் மூலம் கைப்பற்றினோம். பின்னர் 10.45 மணிக்க நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம். எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கைய்யெழுத்து

என்னுடையது தான் அது அ.த.ச.1 ஆகும், இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மாலை 06.00 மணியிலிருந்தே சுற்றுக்காவலில் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் நான்கு பேரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். உதவிம் ஆகும். மதுவிலக்கு அமலில் இல்லாத சமயத்தில் மது அருந்துவது குற்றம் என்றால் சரியல்ல. இந்த மதுபாட்டில்கள் விற்பனை செய்யப்பட்டது. நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது மது பாட்டில்கள் வாங்க வந்தவர்கள் ஓடிவிட்டார்கள். நான் எனது வாக்குமூலத்தில் மதுவாங்க வந்தவர்கள் ஓடிவிட்டனர் என கூறவில்லை என்றால் சரியல்ல.

எதிரி மதுவிற்ற பணத்தை கைப்பற்றினேனா என்றால் இல்லை. எதிரி மதுபாட்டில்களை விற்பனை செய்யாத காரணத்தால் தான் அவரிடம் இருந்து பணத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் காவல் நிலையத்தி்ல் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது. மேற்கண்ட ஆவணம் தயார் செய்தபோது வழக்கின் குற்ற எண் தெரியாது என்றால் சரிதான்.கைப்பற்றுதல் மகசரில் குற்றஎண், சட்டப்பிரிவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான் அதில்தான் நான் சாட்சி கைய்யெழுத்து போட்டுள்ளேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் குற்றஎண் சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்தில் தயார் செய்யபட்டதல்ல என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடம கைய்யொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டவில்லை என்றாலும் பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கில் பா்ரவை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியது மதுவகைகள் அல்ல என்றால் சரியல்ல. மதுவகைகள் எங்கு வைத்து எப்போது வாங்கப்பட்டது என்றால் தெரியாது.

சம்பவ இடத்திற்கும், மதுபாட்டில்களுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமுமஇல்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness

to be correct.

S/d E. Pragasam B.A., B.L.,
Judicial Magistrate No. II,
Pollachi.